செய்தி வெளியீடு எண் : 09 நாள் : 13.05.2019

***தேனி மாவட்டம்***
***பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2019***
***மறு வாக்குப்பதிவு நடைபெறவுள்ள வாக்குச்சாவடி மையங்கள்***
***மற்றும் வாக்குச்சாவடி மையங்களுக்குட்பட்ட பகுதிகளை***
***மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்***
***திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-***

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, மறு வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தேனி பாராளுமன்ற தொகுதி, 199.பெரியகுளம் (தனி) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடுகபட்டி வாக்குச்சாவடி மையம் (எண் 197) 198.ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிக்குபட்பட்ட பாலசமுத்திரம் வாக்குச்சாவடி மையம் (எண் 67) ஆகிய வாக்குசாவடி மையங்கள் மற்றும் வாக்குச்சாவடி மையங்களுக்குட்பட்ட பகுதிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (13.05.2019) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின்போது, பெரியகுளம் சட்டமன்ற தொகுதி வடுகபட்டி சங்கரநாராயணன் நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்திற்குட்பட்ட தெலுங்கர் தெரு, பத்திரகாளியம்மன் கோவில் தெரு, மாரியம்மன் கோவில் தெரு, ஜெயந்தி நகர், காளியம்மன் கோவில் தெரு, குறவர் தெரு ஆகிய பகுதிகளையும், ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி, பாலசமுத்திரம் கம்மவர் சரஸ்வதி நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்திற்குட்பட்ட பாலசமுத்திரம், கல்லுப்பட்டி, பிராதுக்காரன்பட்டி, ஆகிய பகுதிகள், மறுவாக்குப்பதிவிற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடைமுறைகள், அசம்பாவிதங்கள் நடைபெறாமல் முன்னெச்சரிக்கையாக தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள், பறக்கும் படை, நிலை கண்காணிப்புக்குழு, வீடியோ கண்காணிப்பு குழு பணியமர்த்தப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் வாக்குச்சாவடி மையங்களின் அடிப்படை வசதிகளான மின் வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதில் வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்றுவர சாய்தள வசதிகள் போன்றவற்றை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப்பின் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள மறு வாக்குப்பதிவின் போது, பெரியகுளம் சட்டமன்ற தொகுதி வடுகபட்டியில் 197.வாக்குசாவடி மையத்தில் 702 ஆண் வாக்காளர்களும், 703 பெண் வாக்காளர்களும் என மொத்தம் 1405 வாக்காளர்களும், ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி, பாலசமுத்திரம் கம்மவர் சரஸ்வதி நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள 67 வாக்குச்சாவடி மையத்தில் 644 ஆண் வாக்காளர்களும் 611 பெண் வாக்காளர்களும் என மொத்தம் 1255 வாக்காளர்கள் (19.05.2019) அன்று தங்களது வாக்கினை பதிவு செய்ய உள்ளனர்.

மறுவாக்குப்பதிவு குறித்து வாக்காளர்களுக்கு தண்டோரா, ஒலிப்பெருக்கி, தினசரி நாளிதழ், தொலைக்காட்சி போன்ற பல்வேறு வகைகளில் வாயிலாக தெரிவிக்கப்பட்டு வருகிறது. வீடு, வீடாக சென்று வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. வாக்காளர்கள் தங்களது வாக்குப்பதிவினை பதிவு செய்வதற்கு ஏதுவாக வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாக்காளர்கள் எவ்வித அச்சமுமின்றி சுதந்திரமாக வாக்களித்திட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, வாக்காளர் தங்களது வாக்கினை பதிவு செய்து ஜனநாயக கடமையை நிறைவேற்றிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வீ.பாஸ்கரன், மாவட்ட வருவாய் அலுவலர் ச.கந்தசாமி, பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் சி.ஜெயப்பிரித்தா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) ரா.கண்ணகி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மு.சாந்தி, மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளகள் வே.ஆறுமுகம், அ.அமீர் முகம்மது, வட்டாட்சியர்கள் சுந்தர்லால், பாலசண்முகம், வடுகபட்டி செயல் அலுவலர் கணேசன் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**